நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை

முன்னிலை : திரு. ஜானி டாம் வர்கீஸ், இ.ஆ.ப.

நாள்: .03.2024

செ.மு.ந.க.எண்.322/அ1/2024

பொருள் : சமூக நலன் (ம) மகளிர் உரிமைத்துறை, நாகப்பட்டினம் மாவட்டம் – பணியிடங்களில் பாலியல் வன்கொடுமையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013 – நாகப்பட்டினம் மாவட்டத்தில் புகார் மனுக்களை பெறுவதற்கு தாலுக்கா அளவில் வட்டாட்சியர்களையும், கோட்டம் அளவில் கோட்டாட்சியர்களையும், ஊராட்சி ஒன்றியம் அளவில் வட்டார வளர்ச்சி அலுவலர்களையும் மற்றும் நகராட்சி அளவில் நகராட்சிய ஆணையர்களையும் மைய முனை அலுவலர்கள் (Nodal Officers) நியமித்து ஆணையிடுதல் – தொடர்பாக

பார்வை :

1. பணியிடத்து பாலியல் வன்கொடுமையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013.
2. அரசாணை எண்.80, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள்.11.11.2016.
3. சென்னை உயர்நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட பிரமாணப்பத்திரம் ந.க.எண்.8910, நாள்.25.05.2023.
4. சமூக நல ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண். 3325/SRCW/2024, நாள். 07.03.2024

......

**ஆணை:**

பார்வை 2ல் காணும் அரசாணையின்படி பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு சட்டம் 2013ன் படி மாவட்ட அளவில் LCC (Local Complaint Committee) உள் புகார் குழு அமைக்கப்பட்டுள்ளது. பார்வை 3 மற்றும் 4ல் காணும் கடிதத்தின்படி நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள அனைத்து கோட்டம் அளவில் கோட்டாட்சியர்களையும், தாலுக்கா அளவில் வட்டாட்சியர்களையும், ஊராட்சி ஒன்றிய அளவில் வட்டார வளர்ச்சி அலுவலர்களையும், நகராட்சி அளவில் நகராட்சி ஆணையர்களையும் மைய முனை அலுவலர்களாக (Nodal Officers) கீழ்கண்டவாறு உறுப்பினர்களை நியமனம் செய்து ஆணையிடப்படுகிறது.

| வ.எண் | பொறுப்பு பகுதி | பொறுப்பு அலுவலர் |
|---|---|---|
| 1. | நாகப்பட்டினம் கோட்டம் | கோட்டாட்சியர், நாகப்பட்டினம் |
| 2. | வேதாரண்யம் கோட்டம் | கோட்டாட்சியர், வேதாரண்யம் |
| 3. | நாகப்பட்டினம் நகராட்சி | நகராட்சி ஆணையர், நாகப்பட்டினம் |
| 4. | வேதாரண்யம் நகராட்சி | நகராட்சி ஆணையர், வேதாரண்யம் |
| 5. | நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம் | வட்டார வளர்ச்சி அலுவலர், நாகப்பட்டினம் |

| | | |
|---|---|---|
| 6. | வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியம் | வட்டார வளர்ச்சி அலுவலர், வேதாரண்யம் |
| 7. | தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியம் | வட்டார வளர்ச்சி அலுவலர், தலைஞாயிறு |
| 8. | கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றியம் | வட்டார வளர்ச்சி அலுவலர், கீழ்வேளூர் |
| 9. | கீழையூர் ஊராட்சி ஒன்றியம் | வட்டார வளர்ச்சி அலுவலர், கீழையூர் |
| 10. | திருமருகல் ஊராட்சி ஒன்றியம் | வட்டார வளர்ச்சி அலுவலர், திருமருகல் |
| 11. | நாகப்பட்டினம் தாலுக்கா | வட்டாட்சியர், நாகப்பட்டினம் |
| 12. | வேதாரண்யம் தாலுக்கா | வட்டாட்சியர், வேதாரண்யம் |
| 13. | திருக்குவளை தாலுக்கா | வட்டாட்சியர், திருக்குவளை |
| 14. | கீழ்வேளூர் தாலுக்கா | வட்டாட்சியர், கீழ்வேளூர் |
| 15. | வேளாங்கண்ணி பேரூராட்சி | செயல் அலுவலர், வேளாங்கண்ணி |
| 16. | திட்டச்சேரி பேரூராட்சி | செயல் அலுவலர், திட்டச்சேரி |
| 17. | கீழ்வேளூர் பேரூராட்சி | செயல் அலுவலர், கீழ்வேளூர் |
| 18. | தலைஞாயிறு பேரூராட்சி | செயல் அலுவலர், தலைஞாயிறு |

மேற்காணும் பொறுப்பு அலுவலர்கள் தங்கள் பகுதிக்கு உட்பட்ட அரசு அலுவலகங்கள், கல்லூரிகள், தொழில் நிறுவனங்கள் மற்றும் வணிக வளாகங்கள் அனைத்திலும் அந்தந்த அலுவலக மற்றும் நிறுவனத் தலைமையின் கீழ் உள்ளக புகார் குழு (ICC–Internal Complaint Committee) அமைத்துள்ள பணிகளை கண்காணிக்கவும், குழு அமைக்கப்பட்ட விவரங்கள் மாவட்ட சமூகநல அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட்டதை உறுதி செய்யவும் பணிக்கப்படுகிறார்கள். மேலும், மேற்படி குழு அமைக்கப்படாத அலுவலகங்கள், சிறு நிறுவனங்கள் மற்றும் பணியிடத்தலைவர் மீது பெறப்படும் புகார்களை மாவட்ட அளவிலான உள்ளூர் குழுவிற்கு (LCC–Local Complaint Committee) பரிந்துரைக்க பொறுப்பு அலுவலர்களாக நியமித்து ஆணையிடப்படுகிறது.

13/03/2024

மாவட்ட ஆட்சித்தலைவர்
நாகப்பட்டினம் மாவட்டம்

2/3

பெறுநர்
சம்பந்தப்பட்ட அலுவலர்கள்

13/03/2024

நகல்
சமூகநல அணையர்,
சமூகநல ஆணையரகம்,
லேடி வெலிங்டன் கல்லூரி வளாகம்,
காமராஜர் சாலை,
சென்னை 600 005